


## கழக ஆட்சியில் - தூத்துக்குடிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்!

# வெற்றி பெற முடியாத வீண் சவால்களை பழனிசாமி நிறுத்திக் கொள்ள வேண்டும்!

## தூத்துக்குடி தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**தூத்துக்குடி,ஏப்.13-**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12-04-2026) மாலை, தூத்துக்குடி தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்று கையில், கழக ஆட்சியில் தூத்துக்குடிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் அளிக்கப்பட்டன என்றும், வெற்றி பெற முடியாத வீண் சவால்களை பழனிசாமி நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.**

**தூத்துக்குடி தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

முத்துநகருக்கு, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வந்திருக்கிறேன். மீன்வளமும் – துறைமுகமும் – வணிகமும் செழிக்கும், தூத்துக்குடிக்கு வந்திருக்கிறேன். உங்கள் மாவட்டத்தில் என்ன ஸ்பெஷல்? தூத்துக்குடி மக்ரூன், கோவில்பட்டி கடலை மிட்டாய் போன்றே, இந்த மாவட்ட மக்களும் இனிமையானவர்கள்! ஸ்வீட் மட்டுமா, தமிழ்நாட்டுக்கே உப்பு சப்ளை செய்வதும் நீங்கள்தான்!

தனது ஆஸ்தி மொத்தத்தையும் விற்று ஆங்கிலேயர்களை எதிர்த்து கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரின் மண், இந்த மண்! அவர் மட்டுமா, வீரபாண்டிய கட்டபொம்மன், மகாகவி பாரதியார், அண்மையில் மறைந்த தகைசால் தமிழர் ஐயா நல்லகண்ணு உள்ளிட்ட பல விடுதலைப் போராட்ட வீரர்களை, தியாகிகளை தமிழ்நாட்டுக்கு தந்த மண், இந்த தூத்துக்குடி மண்!

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு – கே.வி.கே. சாமி, தலைவர் கலைஞரால் ‘முரட்டு பக்தன்’ என அழைக்கப்பட்ட அண்ணன் என். பெரியசாமி உள்ளிட்ட பல கழகத் தீரர்களைத் தந்த மண்!

இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடியில் பரப்புரையை முடித்துவிட்டு, தூத்துக்குடி வருவதற்கு இரண்டு மணி நேரம் ஆனது. தூத்துக்குடியில் பரப்புரை என்றதுமே, வரும் வழியில் கடந்த 5 ஆண்டில் இங்கு எத்தனை முறை வந்திருக்கிறோம் என்று நான் யோசித்துக் கொண்டே வந்தேன். எனக்கே மலைப்பாக இருந்தது. எத்தனை அரசு நலத்திட்ட விழாக்கள், எத்தனை ஆய்வுகள், எத்தனை தொழிற்சாலைகள் தொடக்க விழா, புதுமைப் பெண் திட்ட விரிவாக்கம்.

எல்லாவற்றிற்கும் மேல் தொடர்ச்சியாக 3 ஆண்டுகள், தூத்துக்குடி, இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, தூத்துக்குடிக்கு ஓடோடி வந்து பார்த்தேன். பத்துக்கும் மேற்பட்ட அமைச்சர்களையும், கூடுதல் அதிகாரிகள் உட்பட ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தையும் உங்கள் மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து, மீட்புப் பணிகளை முடுக்கி விட்டேன். அப்போது, ஒன்றிய அரசு ஒரு ரூபாய்கூட தராத நிலையிலும், நம்முடைய அரசு சார்பில் நிவாரண உதவிகளை அறிவித்து, 666 கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரண உதவிகளை நேரில் வந்து வழங்கினேன். அதுமட்டுமா, வெள்ளப் பாதிப்பில் அதிகம் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாய் வழங்கினோம்.

**தூத்துக்குடியில் அதிக திட்டங்கள்!**

இவ்வாறு, தூத்துக்குடி எப்போதும் பார்க்காத அளவு அதிக திட்டங்களை கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தி இருக்கிறோம்.



அதற்கு முக்கியக் காரணம், இங்கு வரவேற்புரை ஆற்றிய கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி. கனிமொழி அவர்கள், உங்கள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் காரணத்தினால், என்னிடம் பேசி, எப்படியாவது பல்வேறு திட்டங்களை வாங்கிவிடுவார்கள். அதேபோன்று, அதிகாரிகளிடமும், பொறுமையாக – பெயருக்கு ஏற்றவாறு கனிவோடு பேசி – அனைத்து வேலைகளையும் வாங்கிவிடுவார்கள். அதுமட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் – கழகப் பணியிலும் சிறிது இடைவெளி கிடைத்தாலும், உடனே தூத்துக்குடிக்குத்தான் புறப்படுவார்கள். நான் போன் பண்ணும்போது, “என்னம்மா, தூத்துக்குடியில்தான் இருக்கிறாயா” என்று நானே கேட்பேன். கனியும் சிரித்துக் கொண்டு, “ஆமாண்ணே, தூத்துக்குடிதான்” என்று சொல்வார்கள். இப்படி பணி செய்த காரணத்தினால்தான், பின்தங்கிய மாவட்டங்களில் இருந்த இந்த தூத்துக்குடி, இப்போது வேகமாக வளர்ந்து முன்னேறி, தெற்கில் முக்கியமாக கவனிக்கப்படும் மாவட்டமாக இருக்கிறது.

இது உண்மைதான் என்று நிரூபிக்கும் வகையில், இரண்டு நாள் முன்பு ‘தி இந்து’ நாளேட்டில் ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது. “ஒரு காலத்தில் பின் தங்கிய மாவட்டங்கள் என அறியப்பட்ட தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்கள், திராவிட மாடல் ஆட்சியில் அந்த இமேஜை உடைத்து வெளியே வரத் தொடங்கிவிட்டது” என்று எழுதியிருந்தார்கள். இந்தளவுக்கு சாதனைகளைச் செய்து காட்டிய உரிமையோடு, உறவோடு, பாசத்தோடு உங்களைப் பார்த்து, நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு கேட்க வந்திருக்கிறேன். இப்போது, உங்கள் அனுமதியோடு நமது வெற்றி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தலாமா?

**வேட்பாளர்கள் அறிமுகம்!**

முதலில், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் கீதா ஜீவன் அவர்கள். நம்முடைய கழகத் தீரர் என்னுடைய ஆருயிர் அண்ணன் என். பெரியசாமியின் அருமை மகள். “என்னால் பெண் சிங்கம்” என்று பாராட்டப்பட்டவர். திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் உள்ளிட்ட முத்திரைத் திட்டங்களுக்கு பொறுப்பான சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அமைச்சர்! உங்கள் மண்ணின் மகள் கீதா ஜீவனுக்கு உதயசூரியன் சின்னத்தில் மீண்டும் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள். மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராக இருந்து, மீனவர் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டியவர். தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர். இதுவரை திருச்செந்தூர் தொகுதியில் ஆறுமுறை போட்டியிட்டு, அனைத்து முறையும் வெற்றி பெற்றவர். இதிலிருந்தே அவர் எப்படிப்பட்ட செல்வாக்கோடு தொகுதியில் இருக்கிறார் என்பது தெரிகிறது. இந்த முறையும் அனிதா, அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஜி.வி. மார்க்கண்டேயன் அவர்கள். ஏற்கனவே விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, பல்வேறு திட்டங்களை இந்தப் பகுதிகளுக்கு கொண்டு வந்தவர். பார்க்க, பழக அடக்கமானவர். அவருக்கு, மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஊர்வசி எஸ். அமிர்தராஜ் அவர்கள். கடந்த முறை போட்டியிட்டு வெற்றி பெற்றவர். அதுமட்டுமல்ல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி செல்வராஜின் அருமை மகன். தூத்துக்குடி தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர். அவருக்கு நீங்கள் மீண்டும் கை சின்னத்தில் வாக்களித்து மீண்டும் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கா. கருணாநிதி அவர்கள். கோவில்பட்டி நகராட்சித் தலைவர். இவரது அப்பா கயத்தாறு காளிப் பாண்டியன் கேட்டுக் கொண்டதால், தன்னுடைய பெயரையே தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வைத்தார். அந்தக் காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவிய கோவில்பட்டிக்கு, சீவலப்பேரி நீரைக் கொண்டு வந்து தாகம் தீர்த்தவர், முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். அவரின் பெயரைக் கொண்ட கருணாநிதி அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் பை.மு. ராமஜெயம் அவர்கள். தென் திருப்பேரை வட்டாரத்தில் பல்வேறு பொறுப்புகளில் இருந்தவர். தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு வருகிறார். மக்கள் பணியாற்ற இந்த இளைஞருக்கு, நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

இவர்கள் அனைவரின் வெற்றியும் உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! வேட்பாளர்கள் அனைவரும் இப்போது உட்காரலாம். சீட் கன்ஃபார்ம் ஆகிவிட்டது!

நான் ஒன்றும் சும்மா ஆதரவு கேட்டு வரவில்லை. ஏற்கனவே எத்தனை முறை நேரில் வந்து திட்டங்களை தந்தேன் என்று சொன்னேன். இப்போது 5 ஆண்டுகளில் உங்கள் மாவட்டத்திற்காக என்னென்ன செய்திருக்கிறோம் என்று பெரிய லிஸ்ட்டே நான் வைத்திருக்கிறேன்.

இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அதையும் தாண்டி, என்னுடைய தங்கை கனிமொழியை, இந்த தூத்துக்குடி மாவட்ட மகளாக உங்களிடம் நான் ஒப்படைத்திருக்கிறேன். அதனால் என்னிடத்தில் பட்டியல் பெரிதாக இருக்கிறது. அதில் முக்கியமான சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்திய திட்டங்கள்!**

தென் தமிழ்நாட்டின் முதல் டைடல் பூங்காவை தூத்துக்குடி மீளவிட்டானில் திறந்து வைத்திருக்கிறேன்.

சிலாநத்தம் சிப்காட்டில் வின்ஃபாஸ்ட் மின் வாகன தொழிற்சாலை. புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்ட 18 மாதத்தில் உற்பத்தியே தொடங்கிவிட்டது. அப்படி ஒரு ஸ்பீடு! இதனால் தமிழ்நாட்டின் மின்வாகனத் தலைநகராக தூத்துக்குடி மாறியிருக்கிறது.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உயர்தர பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக் கட்டடம். சென்ற மாதம்தான் துணை முதலமைச்சர் உதயநிதி வந்து திறந்து வைத்தார்.

திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடங்கள்.

தூத்துக்குடி மாவட்டத் தந்தை குரூஸ் பர்னாந்து திருவுருவச் சிலை.

கரிசல் இலக்கிய பிதாமகர் கி.ரா. அவர்களுக்கு மணிமண்டபம்.

வீரமாமுனிவர் மணிமண்டபம்.

திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி திருக்கோயிலில் 300 கோடி ரூபாய் மதிப்பில் பெருந்திட்ட வளாகப் பணிகள் நடைபெற்று, குடமுழுக்கும் நடத்தியிருக்கிறோம்.

நமது அரசும், நம்முடைய தூத்துக்குடி எம்.பி. தங்கை கனிமொழியும் தொடர் முயற்சி செய்து, தூத்துக்குடி வாகைகுளத்தில் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டு, இரவு நேர விமான சேவையும் தொடங்கியிருக்கிறது. அதனால்தான், இப்போது நிகழ்ச்சி முடித்து, இப்போது அதில்தான் செல்லப் போகிறேன்.

பொதுவாக, முதலீட்டாளர்கள் மாநாடு என்றால், சென்னையில் நடத்துவார்கள். இல்லை என்றால், கோவையில் நடத்துவார்கள். ஆனால், நம்முடைய அரசில், முதன்முதல் T.N. ரைசிங் மாநாட்டை தூத்துக்குடியில்தான் நடத்தினோம். அந்த நிகழ்ச்சில் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கிறது.

தொடர்ச்சி 7 –ஆம் பக்கம்



**க**ழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி அவர்கள், உங்கள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் காரணத்தினால், என்னிடம் பேசி, எப்படியாவது பல்வேறு திட்டங்களை வாங்கிவிடுவார்கள். அதேபோன்று, அதிகாரிகளிடமும், பொறுமையாக – பெயருக்கு ஏற்றவாறு கனிவோடு பேசி – அனைத்து வேலைகளையும் வாங்கிவிடுவார்கள். அதுமட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் – கழகப் பணியிலும் சிறிது இடைவெளி கிடைத்தாலும், உடனே தூத்துக்குடிக்குத்தான் புறப்படுவார்கள்.